# வலுசக்தி அமைச்சு

## கேள்வி மனுக் கோரலுக்கான அழைப்பு (IFB)

வலுசக்தி அமைச்சிற்கு வாடகை அடிப்படையில் வாகன நிறுத்துமிட வசதிகளுடன் கூடிய அலுவலக வளாகத்தை பெற்றுக்கொள்ளுதல் - 2026/2027

**பெறுகை இலக்கம்: MOE/ADM/LOG/MIN-PROC./2026/01**

வலுசக்தி அமைச்சு வாடகை அடிப்படையில் வாகன நிறுத்துமிட வசதிகளுடன் கூடிய அலுவலக வளாகத்தை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது. இதற்கிணங்க, இலங்கை வலுசக்தி அமைச்சின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுவின் (MPC) தலைவர், பின்வரும் குறைந்தபட்ச தேவைகளுடன் கூடிய அலுவலக கட்டடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த கேள்விமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்களை இதன் மூலம் கோருகின்றார்:

- இடம்: கொழும்பு 1-14, ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே மற்றும் ராஜகிரிய பகுதிக்குள் எளிதில் அணுகக்கூடிய வளாகங்கள்
- குறைந்தபட்ச தள பரப்பளவு: 40,000 சதுர அடி
- வசதிகள்: மின்சாரம், நீர் விநியோகம் (NWS&DB), சுகாதார வசதிகள் மற்றும் மின் உயர்த்திகள், தீ பாதுகாப்பு அமைப்புக்கள்.
- வாகன தரிப்பிடம்: குறைந்தபட்சம் 60 நான்கு சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கான இடம் (அலுவலக வளாகத்தினுள் அனைத்து வாகனங்களும் நிறுத்துவதற்குமான இடம் அல்லது 30 அலுவலக வளாகத்திற்குள் மிகுதியை 1km சுற்றுவட்டத்திற்குள் வாகனங்களை நிறுத்துவதற்கான 500 சதுர அடி. கட்டிடத்துடன் கூடிய வசதிகள்)
- வாடகை காலம்: நீடிக்கக்கூடிய அடிப்படையிலான இரண்டு (2) ஆண்டுகள்

தேசிய போட்டி கேள்விமனு (NCB) முறையின் ஊடாக கேள்விமனு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

**கேள்விமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளுதல்:**

ஆர்வமுள்ள மற்றும் தகுதியுள்ள கேள்விமனுதாரர்கள், 2026 மாசி 23 ஆம் திகதி முதல் 2026 பங்குனி 17 ஆம் திகதி வரை எந்த வேலை நாளிலும் காலை முற்பகல் 9:00 மணி முதல் பிற்பகல் 3:00 மணி வரையான காரியாலய நேரங்களில் வலுசக்தி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளரிடமிருந்து (வழங்கல்) கேள்விமனு ஆவணங்கள் மற்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளும் போது, வலுசக்தி அமைச்சின் செயலாளரின் பெயரில் இலங்கை ரூபாய் மூவாயிரத்து ஐந்நூறு (இலங்கை ரூபாய் 3,500.00) மீள பெற முடியாத கட்டணமாகவும் மற்றும் இலங்கை ரூபாய் பதினாயிரத்து ஐந்நூறு (இலங்கை ரூபாய் 16,500.00) மீள பெற கூடிய கட்டணமாகவும் செலுத்தப்படல் வேண்டும்

அனைத்து கேள்விமனுக்களும், கேள்விமனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் படி, 2026 ஆடி 24 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் ரூபாய் 1,650,067.00 (1.6 மில்லியன்) பெறுமதியுள்ள, (கேள்விமனு செல்லுபடியாகும் திகதி + 28 நாட்கள்) பிணை முறி இணைக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத, சட்டவிரோத படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விமனுக்கள் மற்றும் கேள்விமனு பிணை முறி இல்லாது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும்.

கேள்விமனுக்கள் 2026 ஆணி 25 ஆம் திகதி (91 நாட்கள்) வரை செல்லுபடியாகும்.

முன்னரான கேள்விமனுக் கூட்டமொன்று 2026 பங்குனி 05 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலுசக்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

மேலதிக் விவரங்களுக்கு: https://energymin.gov.lk

**சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித்திகதி:**

முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்களுடன், **இரண்டு பிரதிகள்** மற்றும் அனைத்து துணை ஆவணங்களுடன் கட்டாயம் இருக்க வேண்டும்:

- பதிவு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும், அல்லது
- வலுசக்தி அமைச்சு, இல. 437, காலி வீதி, கொழும்பு 03 முகவரிக்கு நேரடியாக வந்து வழங்கல் பிரிவில் உள்ள கேள்விமனு பெட்டியினுள் இடப்படல் வேண்டும்

2026 பங்குனி 17 ஆம் திகதி பிற்பகல் 01.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குப் பின்னர், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் நேரில் பங்குபற்ற விரும்பும் கேள்விமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில், கேள்விமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.

தயவுசெய்து கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் ‘‘வலுசக்தி அமைச்சிற்கு வாடகை அடிப்படையில் வாகனநிறுத்துமிட வசதிகளுடன் கூடிய அலுவலக வளாகத்தை பெற்றுக்கொள்ளுதல்’’ என்று தெளிவாகக் குறிப்பிடவும்.

**மேலதிக தகவல்களுக்கு:**

வழங்கல் பிரிவு,
வலுசக்தி அமைச்சு:
தொலைபேசி: 011-2574740 / 011-2574922 (Ext. 205, 206)
காரியாலய நேரம்: மு.ப 9:00. – பி.ப4:00 வரை

தலைவர்
அமைச்சு பெறுகைக் குழு
மே /பா சிரேஸ்ட உதவிச் செயலாளர (வழங்கல்)
வலுசக்தி அமைச்சு
2 ம் மாடி.
இல. 437, காலி வீதி, கொழும்பு 03
திகதி: 2026/02/18